கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 27.03.2024
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிபுணத்துவ பயிற்சி பேராசிரியை திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிபுணத்துவ பயிற்சி பேராசிரியை திட்டத்தின் மூலம் வேளாண் மாணவர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 72 நிபுணத்துவ பயிற்சி பேராசிரியர்களை இந்த நடப்பாண்டுக்கு தேர்ந்தெடுத்து உள்ளது.

இதன் ஒரு பகுதியாக 26, மார்ச், 2024 அன்று சுற்றுச்சூழல் அறிவியல் துறையில், உடுமலைப்பேட்டை வெர்மி கோல்டு, உற்பத்தி பிரிவு இயற்கை விவசாயி என்.ஜெய பிரகாஷ், அவர்கள் மாணவர்களிடம் மண்புழு உரம் மற்றும் இயற்கை விவசாய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டு கலந்து உரையாற்றினார். முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் அவர்கள் நிபுணத்துவ பயிற்சி பேராசிரியை மற்றும் தலைவர், முனைவர் தேவகி அவர்களை வரவேற்று மாணவர்கள் மத்தியில் இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் தொழில்முனைவோர் பற்றியும் சிறப்புரை வழங்கினார். இயற்கை வள மேலாண்மை இயக்குனர் முனைவர் பி.பாலசுப்ரமணியம் அவர்கள் தொடக்கவுரையில் துணைவேந்தர் மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் ஆகியோரால் மாணவர்கள் நலனுக்காக உருவாக்கப்படும் திட்டத்தின் முயற்சிகளை எடுத்துரைத்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**